CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி
சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின்
அருளுரை

தொகுப்பு—43

பாரதமென்னும் புண்ணியபூமி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்ய
மஹாஸ்வாமிகளின் அருளுரை

தொகுப்பு-43

பாரதமென்னும் புண்ணியபூமி

வெளியிடுவோர் :

ஸ்ரீ சாரதா டிரஸ்ட்,
பாரதி தெரு, சிருங்கேரி-577 139.

விலை ரூ. 1-50

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. In Public Domain. Digitized by eGangotri

Copies can be had from :
The Publication Manager,
Sri Sharada Trust,
(Madras Office)
Sri Sringeri Math Buildings,
No. 11, Venkatnarayana Road,
MADRAS-600 017.
Phone No. : 442041

Printed at :
Commonwealth Press,
4, Pitchu Pillai Street,
Mylapore, Madras-600 004.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸன்னிதானம்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''பகவான் இராமர் தனது தந்தையின் கட்டளைகளை சிரமேற்கொண்டு பின்பற்றினர். இலட்சுமணன் தனது தமையனுரிடம் மிகுந்த மரியாதை காட்டினர். பரதன், அண்ணனிடம் காட்டிய பக்திதான் எத்தகையது? சீதை, இராமர் மேல் கொண்டிருந்த பற்றுக்கு ஓர் அளவும் கிடையாது. இத்தகைய பாத்திரங்களைக் கொண்ட இராமாயணத்தில் மட்டுமின்றி மஹாபாரதம் மற்றும் பாகவதத்தில் இறைவனின் லீலைகள் மிகத் தெளிவாக வர்ணிக்கப்படுகின்றன. இறைவன் காட்டிய இவ்வளவு லீலைகளும் பாரதமென்னும் இப்புனித பூமியில்தான் நிகழ்ந்திருக்கின்றன. பரமசிவனின் அவதாரமான ஆதிசங்கரரும் அவதரித்தது இப்புனித நாட்டில்தான். இத்தகைய நாட்டில் பிறந்த நாமும் புண்ணியச் செயல்களையே செய்கிறோமா என்பதை நாம் ஒவ்வொரு வரும் பார்த்துக்கொள்ள வேண்டும்''. இக்கருத்துக்கள் விளக்கமாக இடம்பெற்றுள்ள ஓர் அருளுரையை 'டின்டோரி' என்ற (வடநாட்டிலுள்ள) ஓர் ஊரில் நம் ஆசார்யாள் 15—12—82ம் நாளன்று வழங்கியிருந்திருக்கிறார். ஹிந்தியிலிருந்து அருளுரை தமிழாக்கம் செய்யப்பெற்ற பின் திருவாளர்கள் கோ. இரா. சிவராமகுமாரும், கோ. இராம சுப்ரமணியனும் புத்தக வடிவில் தொகுத்தனர். இப்புத்தகமே ஸ்ரீ சாரதா டிரஸ்டின் வெளியீடான 'ஆசார்யாளின் அருளுரைகள்' என்ற தொகுப்பில் 43-வதாக விளங்குகிறது. இப்புத்தகத்தை வெளியிடுவதற்கு திரு. எம். ஆர். சுப்பிரமண்யம் அவர்கள் உதவி செய்தது குறிப்பிடத்தக்கது.

இப்படிக்கு,

இரா. மு. உமேஷ்,
ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு
சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின்
தனிச்செயலாளர்.

சிருங்கேரி
1-4-1984

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பாரதமென்னும் புண்ணியபூமி

கங்காபூரப்ரசலிதஜடாஸ்ரஸ்தபோகீந்த்ரபீதாம்
ஆலிங்கந்திமசலதனயாம் ஸஸ்மிதம் வீக்ஷமான: |
லீலாபாங்கை: ப்ரணதஜனதாம் நந்தயம்ச்சந்தரமௌலி:
மோஹத்வாந்தம் ஹரது பரமானந்தமூர்திச்சிவோ ந: ||

நாமெல்லோரும் மிகவும் புண்ணியசாலிகள். ஏனென்றால் நமக்கு மனிதப் பிறவி என்ற விசேஷமான பாக்கியம் கிடைத்திருக்கிறது. நாம் சத்புருஷர்களுடன் (நல்லோர்கள்) சம்பந்தம் வைத்திருப்பவர்களோ புண்ணியசாலிகள் என்போம். ஏனென்றால் மகான்களின் சேர்க்கையினால் மற்றவர்களும் புண்ணியசாலிகளாகி விடுவார்கள். நாம் பிறந்த இந்த பாரத பூமியிலேதான் பகவான் இராமர் அவதாரம் பெற்று உலகிற்கு நல்வழி காட்டினார். அதேபோல் இதே புண்ணிய பூமியில்தான் கிருஷ்ணபரமாத்மாவும் அவதரித்து மக்களுக்கு உபதேசங்களை அருளினார். அதேபோல் இந்த பூமியில் பரமசிவனும் ஆதிசங்கரராக அவதாரம் செய்து எல்லோருக்கும் நல்லுபதேசங்களைத் தந்தார். ''நீங்கள் யாரை வேண்டுமானாலும் உபாசனை செய்யுங்கள். ஆனால் ஒரே பரம்பொருளைத்தான் நீங்கள் உபாஸனை செய்கின்றீர்கள். மற்ற தெய்வங்களுக்குள் வேற்றுமையைப் பார்க்க வேண்டாம்'' என்று சங்கரர் உபதேசித்தார். இவ்வாறு பகவானுடைய அவதாரங்கள் பல இந்த பாரத பூமியில் நிகழ்ந்துள்ளன.

ஆகையால் நாமும் மிகவும் புண்ணியசாலிகள். ஆனால் நாம் ஒன்றை யோசிக்க வேண்டும். நாம் ஒழுங்காக இருக்கின்றோமா, என்று பார்த்துக்கொள்ள வேண்டும். யானையின் வயிற்றிலிருந்து பிறக்கும் குட்டியும், யானையாகத்தானிருக்கும். அதேபோல் இந்த புண்ணிய ஸ்தலத்தில் (பாரத பூமி) தோன்றிய நாம் புண்ணிய காரியங்களையே அனுஸரித்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அவைகளுக்கேற்றாற்போல் வாழ்கின்றோமா என்று பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் இருந்தோமென்றால் அது பெருமைக்குரிய செயலாகும். நாம் இந்த பூமியின் சிறப்பைத் தெரிந்துகொள்ளவில்லையென்றால், மேலும் நமக்கென்று நாம் இலட்சியத்தை வைத்துக்கொள்ளவில்லையென்றால் என்ன பிரயோஜனம்?

நாம் சுகத்தினையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறோம்; துக்கத்தினையும் அநுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் இரண்டிலும் சமமாக இருக்க வேண்டும். பாமர மக்களோ இன்பம் வந்தால் மகிழ்வார்கள்; துன்பம் வந்தால் மிகவும் துயரப்படுவார்கள். இதற்குக் காரணம் என்ன? ஒரு தீவிரமான மன உறுதி கிடையாது. பகவான் இராமச் சந்திரர் அவதாரம் பெற்றுக்கொண்டபொழுது பலவிதமான கஷ்டங்களை அநுபவித்தார். வனவாசத்திற்குச் சென்ற போதிலும் அவர் மனதில் சற்றும் மாறுதலேற்படவில்லை. அவர் அயோத்தியா நகரில் எவ்வளவு இன்பத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தாரோ, அதேபோல்தான் காட்டிலும் வாழ்ந்து கொண்டிருந்தார். இதற்குக் காரணமென்னவென்றால் அவர் ஓர் இலட்சியத்தை வைத்துக் கொண்டிருந்தார். ''நாம் நம்முடைய கடமையைச் செய்ய வேண்டும்'' என்பதை நமக்குக் காட்டிக் கொண்டிருந்தார் அவர். ''நாம் இந்த உலகத்தில் போகத்தை அனுபவிப்பதற்கோ, ஸ்வார்த்தத்தைச் (தான் விரும்புவனவற்றை) சாதிக்க வேண்டுமென்பதற்கோ மட்டும் பிறக்கவில்லை'' என்று காட்டினார் அவர். அந்த மனோபாவம் இருந்ததனால்தான், பகவான் இராமச் சந்திரர் ஒருவித மாறுதலுமில்லாமல் சமமாகவே இருந்து கொண்டிருந்தார்.

கடமை என்பது ஒவ்வொருவனுக்கு ஒவ்வொரு மாதிரி மாறிக்கொண்டேயிருக்கும். ஒரு குழந்தைக்கு தன் அப்பாவையும், அம்மாவையும் மரியாதையோடு பார்க்க வேண்டும், அவர்கள் சொற்படிக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும் என்பது கர்தவ்யம். அதே போல் தாய் தந்தையர்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கட்குத் தங்கள் புத்திரர்கள் மேல் பாசத்தை வைத்துக் கொண்டு புத்திரர்களின் நன்மைக்காகப் பாடுபட வேண்டும் என்பது கடமையாகும். அவர்கள் அவ்வாறு செய்யவில்லை யென்றால் அவர்களை உண்மையான தாய், தந்தையர் என்றே நாம் கூற முடியாது. ஆனால் புத்திரனிடத்தில் அதிகமாகப் பாசம் வைத்தால் அதிலிருந்து கஷ்டம்தான் ஏற்படும். உதாரணத்திற்கு, தசரதர் தன் புத்திரனின் மேல் மிகவும் அதிகமான பாசம் வைத்திருந்தார். அதனால்தான் அவர் புத்திரன் பிரிந்து சென்றவுடன் அதைத் தாளாது மரண மடைந்து விட்டார். இதற்கு நேர்மாறாக இருந்தவள் கைகேயி. கைகேயிக்கு 'மந்தரா' என்ற தீய பெண்ணின் சேர்க்கை இருந்தது. எப்படி சகவாசம் இருக்குமோ அதற் கேற்றாற்போல்தான் ஒருவனது மனம் மாறும்.

கைகேயி முதலில், இராமர் கௌசல்யையின் புதல்வனா யிருந்தாலும் தன் புதல்வனைப் போல் கருதி இராமரின் மேல் மிகவும் பிரியம் வைத்திருந்தாள். ஆனால் தீயவளான மந்தரை கைகேயியிடம் வந்து, ''உன்னுடைய புதல்வனுக்கு அரசு எதுவும் கிடைக்கப் போவதில்லை. அரசன், இராம னுக்குத்தான் அரசாளும் உரிமையைக் கொடுக்க விரும்பு கின்றான். ஆதலால் நீ இராமச்சந்திரனை காட்டில் வாசம் செய்யுமாறு கூறி அனுப்பிவிடு. உன்னுடைய புதல்வன், பரதனை அரசனுக்குவதற்கு முயற்சி செய்''என்று சொன்னாள். இந்த வஞ்சகக்காரியின் வார்த்தைகளைக் கேட்டதினால் கைகேயியின் மனம் மாறிவிட்டது. அவளும், தசரதன் தனக் குக் கொடுத்த இரண்டு வரங்களை (வாக்குறுதிகளை) இதற்கு உபயோகப்படுத்திக் கொண்டாள். தசரதரும் சக்தியிழந்து அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடந்து விட்டார். இராமரோ, ''என் தந்தையின் கட்டளைகளை என் உயிர் போனாலும் பொருட்படுத்தாமல் நான் நிறைவேற்றுவேன்'' என்று தீர்மானமாக இருந்தார். அதுவே ஒரு புத்திரனின் இலக்ஷணம். ஆனால் இராமர் தந்தையிடம் சென்றபோது, அவர் பிள்ளைப் பாசத்தினால் ஒன்றும் சொல்லாமலிருந்தார்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆனால் இராமர் விஷயத்தை அறிந்தவுடன் 'என் தந்தையின் கட்டளையை நான் பின்பற்றித்தான் தீருவேன். என் உறுதி மொழியை கடைப்பிடித்துத்தான் தீருவேன். அதை நான் செய்யவில்லையென்றால் உமது புதல்வனே ஆகமாட்டேன். 14 வருடங்களுக்குப் பிறகு நான் இந்த நகரத்திற்கு மீண்டும் வருவேன்' என்று தசரதனிடம் கூறித் தீர்மானம் செய்தார்.

இதே நிலையில் வேறொருவன் இருந்திருந்தால் என்ன செய்திருப்பான்? என்று யோசிக்க வேண்டும். இராமரின் தம்பி இலக்ஷ்மணருக்கு இராமர் மேல் அதிகமான பற்று இருந்தது. அவர் இராமரிடம், ''நீர் எதற்காக வனவாசத் திற்குச் செல்ல வேண்டும்? நீரோ எங்களுக்கு மூத்தவர். முதலில் பிறந்தவருக்கு அரசனுவதற்குத் தகுதியிருக்கிறது. நமது தந்தையோ பைத்தியம் பிடித்தவரைப்போலாகி விட்டார். தமது மனைவியின் பேச்சையே கேட்டுக் கொண்டிருக்கின்றார்'' என்று கூறினான். அப்போது இராமர், ''எவர் நமக்குத் தலைவராய் இருக்கிறாரோ அவருடைய கட்டளையை நாம் நிறைவேற்ற வேண்டும். அவர் எப்படியிருந்தாலும் சரி. அதைப் பற்றி நாம் ஆராயக் கூடாது. என்னுடைய தந்தை என்னை வனவாசத்திற்குச் செல்லும்படிக் கட்டளையிட்டுள்ளார். அதனை நான் நிறைவேற்ற வேண்டும்'' என்று சொன்னார். அதற்கு இலக்ஷ்மணன் இராமரை நோக்கி, ''நீங்கள் உங்களுடைய தீர்மானத்தில் இவ்வளவு உறுதியாக இருக்கிறீர்களென்றால் உங்களுக்குத் தம்பியாக இருக்கும் நான் உங்களுடனேயே வருவேன். அப்படி நான் அதை விட்டு, இந்த இராஜ்யத்திலேயே இருந்தேனென்றால் பெரிய பாவியாகிவிடுவேன்'' என்றான். இது தம்பியின் குணத்தைக் காட்டுகிறது.

இராமர் வனவாசம் செய்யப்போகும் விஷயம் சீதைக்குத் தெரிந்தவுடன் அவள், தானும் இராமருடன் வரவேண்டுமென்று ஆசைப்பட்டாள். அப்போது இராமர் சீதையிடம், ''நீ சுகமாக வாழ்ந்து வந்தவள். காட்டிற்கு வந்தால் மிகவும் கஷ்டத்துடன் வாழவேண்டியிருக்கும். நான் மட்டும் சென்று வருகிறேன்'' என்று சொன்னார். அதற்கு சீதை, ''நீங்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எங்கு இருக்கிறீர்களோ அங்குதான் எனக்கு சுகம். நான் இங்கு அயோத்தியிலிருந்தாலும், சுகத்தைத் தரும் பொருட்கள் இங்கு இருந்தாலும், அவற்றால் எனக்கு சுகமில்லை. நீங்கள் இருக்குமிடம்தான் எனக்குச் சுகம் கிடைக்குமிடம். ஆதலால் நான் நிச்சயமாக உங்களுடன் வருவேன்'' என்றாள். இதிலிருந்து ஒரு உண்மையான மனைவியின் கடமை எப்படி இருக்க வேண்டும், அவள் எவ்வாறு தன்னுடைய கடமைகளை செய்து கொண்டு வரவேண்டும் என்பவை தெரியவருகின்றன. மேலும் பார்ப்போம்.

பரதன் அயோத்திக்கு திரும்பி வந்தார். அப்பொழுது அவருடைய தாயாரான கைகேயி பரதனிடம், ''நீ இப்பொழுது முடிசூட்டிக் கொள்ளலாம் இராமர் காட்டிற்குச் சென்று விட்டார்'' என்றெல்லாம் சொன்னாள். அதற்கு பரதன், ''அதெல்லாம் தர்மமாகுமா! தமையன் இருக்கும் போது நான் அரசனாக முடியுமா? அது முடியவே முடியாது. நீ பெரிய பாவத்தைச் செய்துள்ளாய். நீ எனக்குத் தாயாராக இருப்பதற்கே உனக்கு அருகதையில்லை. நானும் இராமரிடமே செல்கின்றேன்'' என்று சொல்லிவிட்டு உடனே பரதன் இராமரைத் தேடி காட்டிற்குச் சென்றார். இராமரிடம் சென்ற பரதன் அவரை அயோத்திக்கு வருமாறு பிரார்த்தனை செய்தார். ஆனால் இராமரோ, ''இல்லை, தந்தையின் கட்டளைப்படி நீதான் முடிசூட்டிக்கொள்ள வேண்டும். அதுதான் சரி'' என்று கூற, பரதன், ''நீங்கள் இருக்கும்போது நான் எப்படி முடிசூட்டிக் கொள்வது? அது சரியில்லையே!'' என்று கூறினார். அப்போது இராமர், ''நாம் தர்மத்திற்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். நம் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதுதான் நம் தர்மம். ஆதலால் நீ முடிசூட்டிக்கொண்டு ஆட்சி புரிய வேண்டும்'' என்று கட்டளையிட்டார். அப்போது பரதன் இராமரிடம், ''நீங்கள் உங்கள் பாதுகையை எனக்கு அனுக்ரஹம் செய்து தாருங்கள். தங்கள் பாதுகையை சிம்மாசனத்தில் வைத்து அரசனைப் போல் பாவித்து நான் உங்கள் அடிமையாக அரசாட்சி

Sri Vidyabharathi Book Digitize, Srinagar

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செய்து வருகின்றேன்'' என்று பிரார்த்தனை செய்தார். அதன் படியே நடந்தது.

இதிலிருந்து பரதரின் உத்தம குணங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. இவ்வாறு இராமாயணத்தில் ஒவ்வொரு கதையையும் நாம் பார்த்தால் நாம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பவை ஸ்பஷ்டமாகத் (தெளிவாகத்) தெரிகின்றது.

இதே போல் இராமராஜ்யத்தைப் பற்றிய வர்ணனையை நாம் இராமாயணத்தில் காண்கின்றோம். மக்கள் எல்லோரும், ''நாம் இராமரின் பிரஜைகள். அரசர் நமக்கு எவ்வாறு கட்டளையிடுவாரோ அவ்வாறே நாம் நடந்துகொள்ள வேண்டும். அதற்கு எதிராக நாம் ஒன்றும் செய்யக்கூடாது'' என்கிற மனோபாவத்தோடும், விஸ்வாசத்தோடுமிருந்தார்கள். இராமரும் அதேபோல், ''மக்களுக்கு நான் துரோகம் செய்யக் கூடாது. அவர்களுடைய சுகத்தைத்தான் நான் இலட்சியமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் ஏதாவது விரும்பி அதன்படி நான் நடந்துகொள்ளாமல் போனால், நான் அரசனாக இருப்பதற்கே தகுதியில்லை. ஒரு செயல் அதர்மமானாலும் மக்களுக்காக, நான் அதைச் செய்தே தீர வேண்டும்'' என்கிற பாவனையோடு இராமரும் இருந்தார். மக்களின் விருப்பம் அவ்வாறு இருந்ததினால் இராமர் சீதையைத் தியாகம் செய்யவும் துணிந்தார். இராமருக்குச் சீதையைத் தியாகம் செய்வதில் சற்றளவும் பிரியமில்லை. அதனால் அவர் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். ஆனாலும் மக்களை திருப்திப்படுத்த வேண்டும் என்ற கடமை இருந்ததனால் அதன்படி சீதையையும் காட்டில் விட்டு விட்டார். பிறகு அவர் ஒரு அசுவமேத யாகம் செய்தார். அந்த யாகத்தைச் செய்யும்போது சீதை அவரிடமில்லை. ஆதலால் சீதையைப் போன்று ஒரு தங்கமூர்த்தியை (சிலையை) செய்து சீதையின் பிரதிநிதியாக அந்தத் தங்க மூர்த்தியை வைத்துக்கொண்டு அந்த யாகத்தை நடத்தினார். இதிலிருந்து

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இராமருக்கு சீதையின் மேல் இருந்த பிரியம் போகவில்லை என்பது தெரிகிறது.

இம்மாதிரி நாம் இராமாயணத்திலுள்ள பல கதைகளைப் பார்த்தால், பிதாவாகிய தசரதருக்குப் புத்திரன் மேலிருந்த பிரீதி (ஆசை), பரதனுக்கு இராமரின் மேலிருந்த (மனை) பாவம், இராமரிடம் லக்ஷ்மணனுக்கிருந்த பாசம், இராமருக் கிருந்த எண்ணங்கள் போன்றவையெல்லாம் தெளிவாகிறது. இதிலிருந்து நாம் எப்படியெல்லாம் நம் வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதும் நமக்குத் தெரிகிறது. இதை யெல்லாம் பார்க்கும்போது இராமர் ஒரு மனிதரைப் போல் வாழ்ந்தார் என்று நாம் எண்ணினாலும் இராமரை அவதார புருஷர் என்றுதான் நாம் கருதுகின்றோம். அதேபோல்தான் கிருஷ்ணபரமாத்மாவின் ஜீவனத்திலும் நாம் பார்க்கலாம்.

சில சமயங்களில் கிருஷ்ணபரமாத்மா தான் பரம் பொருள் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டார். மற்ற சில சமயங்களில் தான் ஒரு மனிதன் என்பதைப் போல் நாடகமாடி, மக்களுக்கு வழிகாட்டினார். அப்பேற்பட்ட கிருஷ்ணபரமாத்மா அர்ஜுனனை நிமித்தமாக வைத்துக் கொண்டு அனைத்துலகிற்கும் உபதேசத்தினைக் கொடுத்தார். அதுவே பகவத்கீதையாகும். அதில் பலவிதமான உபதேசங்க ளிருக்கின்றன. உதாரணத்திற்கு,

'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜன்ம
ம்ருதஸ்ய ச'

(பிறந்தவைகட்கு இறப்பும் இறந்தவைகட்கு பிறப்பும் நிச்சயம்)

என்று கூறியுள்ளார். "எவன் பிறந்திருக்கிறானோ அவனுக்கு மரணம் நிச்சயமாக இருக்கும் ஒருவனுக்குச் சீக்கிரமாக மரணம் ஏற்படலாம். மற்றொருவனுக்கு நிதானமாக மரணம் ஏற்படலாம். இதில் வேண்டுமானால் வேற்றுமை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

யிருக்கலாம். ஆனல் மரணம் இருக்குமென்பதில் வேற்றுமை கிடையாது. ஆதலால் சாவைக் கண்டு கவலேப்பட்டுக் கொண்டோ அதை நினைத்து அழுது கொண்டோ இருக்கக் கூடாது'' என்கிற இந்த உபதேசத்தை நாம் கீதையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

அதே போல் யுதிஷ்டிரர் (தர்மர்) சரித்திரத்தையும் நாம் மகாபாரதத்தில் படித்தால் பார்க்கலாம். அவர் மிகவும் நல்ல குணம் பொருந்தியவர். தர்மத்தில் மிகவும் ஈடுபாடுள்ள வர். அவர், ''வனவாசத்திற்கு நான் செல்லமாட்டேன்'' என்று சொல்லி பலாத்காரமாக அங்கேயே இருந்திருக்க முடியும். ஆனலும், ''நான் சூதாட்டத்தில் தோற்றுவிட்டேன். ஆதலால் நான் கொடுத்த வாக்கை நிறைவேற்ற வேண்டும்'' என்ற பாவனையுடன் காட்டிற்குச் சென்ருர். அவ்வாறு சென்றுவிட்டுப் பிறகு தர்மத்திற்கு வெற்றி ஏற்பட்டபோது அவர் அரசரானர். அனைத்து மக்களுக்கும் மிகப் பிரியமானவ ராகவே இருந்தார். இது போன்ற விஷயங்களே நாம் இராமாயணத்திலிருந்தும், மகாபாரதத்திலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். ஆகையால் நாம் தர்மத்தை (கடமைகளே) தெரிந்துகொள்ள இராமாயண, மகாபாரதக் கதைகளே அடிக்கடி கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். அதன் மூலமாக நாம் நன்மையை அடையலாம்.

நாம் இவற்றின் மூலம் நம் சர்தவ்யத்தைத் தெரிந்து கொள்ளலாம். ஆனல் கடமைகளின் மூலப் (ஆதாரம்) நமக்கு வேதங்களின் மூலமாகத்தான் உபதேசம் செய்யப்பட்டுள்ளது. நம் பாரதத்தின் பழமையான தர்மம் எதுவோ அதுவே ஸநாதன தர்மம். அதற்கு ஆதாரமாக இருப்பது வேதம். நம் நாட்டு முனிவர்களெல்லாம் புதிதாக ஒன்றும் எழுத வில்லே. அவர்கள் வேதத்தில் எது இருக்கிறதோ அதைத் தான் உபதேசித்தார்கள். ஸ்மிருதிகளின் வடிவத்தில் வேதத் தில் சொல்லப்பட்டவற்றை ஓரளவிற்குத் தெளிவுபடுத்தினர் கள். ஆனல் சொந்தமாக ஒன்றும் அவர்கள் சொல்லவில்லே.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஆகையால் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது நம் தர்மம் ஆகும். வேதம் தோன்றிய காலம் — தொடக்கமே யில்லாதது. அது பாரதத்தில், எப்போதும் பிரச்சாரத்தில் இருந்துகொண்டு வருகிறது.

மற்ற (தர்மங்களுக்கு) மதங்களுக்கு 'முதல் உபதேசகர்' என்று ஒருவர் இருப்பார் ஆனால் நம் தர்மத்திற்கு அவ்வாறு யாரும் (எந்த மனிதரும்) இல்லை. (மக்கள் படைக்கப்பட்ட போதே நம் தர்மமும் நிர்ணயமாகிவிட்டது) நம் வேத கலாச்சாரம் அநாதியாய் இருக்கிறது. நாம் பாரதத்தில் தொன்றுதொட்டே இருந்து வருகிறோம்; நாம் எங்கிருந்தோ புதிதாக வந்தவர்களில்லை. ஆதலால் நம் தர்மம் இதுவே தான். இதில் சிறிதளவிற்கும் சந்தேகத்திற்கிடமில்லை.

நம்முடைய பாரதநாடு புண்ணியபூமி. அதனால் நான் பாரதீய கலாச்சாரத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் வெளிநாட்டிற்குச் சென்றாலும், தன் தந்தையின் சிரார்த்தம் செய்யும் காலத்தில் திரும்பி வருவதுண்டு. கயையில் சிரார்த்தம் செய்தால் விசேஷம் என்று அவர்கள் கருதுவார்கள். இவற்றையே வெளிநாட்டில் செய்தால் என்ன தவறு என்று அவர்களில் சிலர் யோசிக்கலாம். ஆனால், வெளிநாட்டு பூமியில் போகங்களை அனுபவிக்கலாம்; பணத்தைச் சம்பாதிக்கலாம். ஆனால் நம் நாட்டின் புனிதத் தன்மை அங்கு எங்கே இருக்கிறது? இதிலிருந்து பாரதத்தின் ஒரு புண்ணியத் தன்மை என்ன என்பது நமக்குத் தெரிய வருகிறது. நமது பரம்பரைக்கு எப்போது மதிப்புண்டு என்றால், நமக்கு ஒரு 'சீலம்' (பண்பு) என்பது இருந்தால்தான். நமக்கு அந்த 'சீலம்' என்பது விட்டுப் போய்விட்டால் நமது பரம்பரையைக் காப்பாற்றிக்கொள்ள இயலாமல் போய் விடும். பண்பில்லாமல் வாழ நாம் இடங்கொடுக்கக் கூடாது. இந்த 'சீலம்' என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறும் பொழுது கௌதமர் என்ற மகரிஷி,

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

'தயா ஸர்வபூதேஷு, க்ஷாந்தி:, அனசூயா, சௌசம், அநாயாஸ:, மங்கலம், அகார்ப்பண்யம், அஸ்ப்ருஹா' என்று சொல்கிறார்.

தயா ஸர்வபூதேஷு என்றால் மற்றவர்களிடம் கருணையுடன் இருத்தல்; க்ஷாந்தி: என்றால் மற்றவர்கள் தவறு செய்தால் அவர்களை மன்னிப்பது; அனசூயா என்பது பிறரைப் பற்றி வீண்க குற்றம் சொல்லாதிருத்தல்; சௌசம் என்பது தூய்மை; அநாயாஸ: என்றால் சோம்பேறித்தனமின்மை; மங்கலம் என்றால் இனிய வார்த்தையும் இனிய முகபாவமும்; அகார்ப்பண்யம் என்பது உலோபியாய் இல்லாதிருத்தல்; அஸ்ப்ருஹா என்பது ஆசையை கட்டுப்பாட்டில் வைத்தல் ஆகும்.

நாம் எல்லோரும் ஒரே இறைவனின் குழந்தைகள் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

நம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு தாயார், வெவ்வேறு தம்பி போன்றவர்கள் இருந்தாலும் நாமெல்லோரும் ஒன்று என்று நாம் சொல்வோம். இது எப்படியென்று கேட்டால் நம் எல்லோருக்கும் தந்தையாக இருப்பவன் ஒரே இறைவன் தான். அந்த இறைவனை நாம் மறந்துவிட்டோமென்றால், அவனது கட்டளைகளை நாம் பின்பற்றவில்லையென்றால், நாம் நம் தந்தைக்கே துரோகம் செய்தது போலாகும். ஆதலால் நாம் எல்லோரும் எப்போதும் ஒருவரே என்பதைக் கருத்தில் கொண்டு இறைவனின் ஆக்ஞையைப் (கட்டளைகளைப்) பரிபாலனம் செய்யவேண்டும். அந்த இறைவனுக்கு உருவமே கிடையாது. அவனைப் பற்றிக் கூறும்பொழுது,

'ஆகாசவத் ஸர்வகதச்ச நித்ய:'

(நிலையாகவும், ஆகாசத்தைப் போல் எங்கும் நிறைந்தும்) என்று சொல்வதுண்டு. இதிலிருந்து பகவான் எல்லா இடத்திலும் இருக்கிறான் என்பது தெரிகிறது. இதற்கு ஒரு கதையும் கூறப்படுவதுண்டு. அது பிரகலாதனின் கதையே ஆகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பிரகலாதனிடம் அவனுடைய தந்தை, ''பகவான் எங்கிருக்கிறான்?'' என்று கேட்டான். அதற்கு பிரகலாதன், ''பகவான் எல்லாவிடத்திலும் உள்ளான்'' என்று சொன்னான். அதற்கு அவனது தந்தை ஹிரண்யகசிபு, ''இந்தத் தூணில் பகவான் இருக்கின்றானா? என்று வினவ, பிரகலாதன், ''ஆம், இந்தத் தூணிலும் உள்ளான்'' என்று கூறினான். அப்போது ஹிரண்யகசிபு, ''எங்கே! இறைவனைக் கூப்பிடு, பார்க்கிறேன்'' என்று ஒரு கடுரமான வார்த்தைகளைக் கூறி கர்ஜனை செய்தான். அப்பொழுது பிரகலாதன் பகவானைப் பிரார்த்தனை செய்ய, பகவான் அங்குக் காட்சியளித்தார். பகவான் காட்சியளித்தது உண்மை. ஆனால் ஹிரண்யகசிபு கருணை காட்டக்கூடாத ஒரு இராக்ஷஸன். அவனை பகவான் கண்டவுடன், ''இவனை உலகத்தில் விட்டுவைத்தால் நிறைய பேருக்குத் துன்பம்தான் கொடுத்துக்கொண்டிருப்பான். ஆதலால் இவனை நாம் இப்பொழுதே அழைத்துச் செல்ல வேண்டும்'' என்று தீர்மானித்து அவனை உடனே ஸம்ஹாரம் (அழித்தார்) செய்தார்.

இந்தக் கதையிலிருந்து நமக்கு, ''பகவான் எல்லாவிடத்திலும் நிறைந்துள்ளான். அவன் எங்கு வேண்டுமானாலும் காட்சியளிக்கலாம்'' என்று தெரிகிறது. பகவான் எல்லாவிடத்திலும் நிறைந்திருந்தாலும் பலவிதமான வகையில் காட்சியளித்தும் உள்ளான். உதாரணமாக அர்ஜுனனுக்குப் பகவான் நண்பனுடைய உருவத்தில் காட்சியளித்தான். நண்பனைப் போலவே அர்ஜுனனிடம் பழகிக் கொண்டிருந்தார். ஆதலால் அர்ஜுனனுக்கு அவர் பகவான் என்றே தெரியாமற்போய்விட்டது. ஆதலால் அவன் பிறகு பகவானின் மகிமையை அறிந்தவுடன்,

''ஸகேதி மத்வா ப்ரஸபம் யதுக்தம்
ஹே க்ருஷ்ண ஹே யாதவ ஹே ஸகேதி |''

(கவனக் Sri Kalyanaraman Book Centre, Singapore உன்னை,
''க்ருஷ்ணா! யாதவனே! நண்பனே!'' என்று வெறும்

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நண்பனுக எண்ணி எலவையெல்லாம் கூறினேனே ..)
என்று கூறினன்.

''பகவானே! உன்னை நான் என் சிநேகிதன் என்று கருதி பரிகாசமெல்லாம் செய்துள்ளேன். பலவிதமான குற்றங்கு ளெல்லாம் செய்துள்ளேன். இவற்றையெல்லாம் மன்னித் தருள வேண்டும்'' என்று பிரார்த்தனை செய்கின்றான். இதி லிருந்து பகவான் நண்பனுகவும் காட்சியளிக்கலாம் என்று தெரிய வருகிறது. பகவான் எல்லாவிடத்திலும் இருந்து காட்சியளித்துக்கொண்டிருக்கின்றான். ஆனல் நமக்கு அவ னைத் தெரிந்துகொள்ள சக்தியில்லாததினல் நாம் அவனைப் பார்ப்பதில்லை. அப்பேற்பட்ட பகவான் உண்மையில் எப்படி யிருக்கிறான்? அவன் உண்மையில் உருவத்தோடு காட்சி யளிக்கக் கூடியவனு அல்லது உருவமில்லாதவனு? பகவானே இவ்விஷயத்தைப் பற்றி,

''அஜோ ஈபி ஸன்னவ்யயாத்மா பூதானும்
ஈச்வரோ ஈபி ஸன் |''

(நான் பிறக்காதவன், அழியாதவன், உயிர்களுக்கெல் லாம் தலைவன் என்றும்..)

என்று கூறுகின்றார்.

பகவானுக்கு உண்மையில் ஒருவிதமான பிறவியும் கிடை யாது; அழிவும் கிடையாது. அவனுக்குப் பிறவியும், மரண மும் இல்லாவிட்டாலும், உலகத்தை முன்னேற்ற, தனது மாயா சக்தியினல் அவதாரம் செய்கின்றான். அதனல் அவ னுக்குப் பிறவி உண்டானது போல் ஆகிவிடுகிறது. ஏனென் றால் (அவதாரங்களின்போது) அவனது உடல் நமக்குத் தெரி கிறது. அவன் அவதாரத்தின் நோக்கம் முடிந்தவுடன் தனது (அவதார) உடலை மறையும்படிச் செய்கின்றான். இந்த பகவான் நமக்கு [illegible] செய்தவன். அவனை நாம் எப்போதும் நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். அவன்

Sri Gyanbharathi Book Centre, Srirangam

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தன் அவதாரத்தில் எந்த உபதேசம் கொடுத்தானே, அவற்றி லிருந்து நம் கடமைகளை அறிந்துகொள்ள வேண்டும். இவை யெல்லாம் நாம் தெரிந்துகொள்ள பகவானின் லீலைகளைப் பற்றிய அறிவு நமக்கு இருக்க வேண்டும்.

பகவான் என்ன உபதேசங்களைக் கொடுத்தான் என்பது தெரிய, அவனது அவதாரத்தைப் பற்றிப் படிக்க வேண்டும். ஆகவே நாம் இராமாயணம், மஹாபாரதம், பாகவதம் போன்ற புத்தகங்களைப் படித்துக் கொண்டிருக்க வேண்டும். அவைகளைக் கேட்டுக் கொண்டிருக்கவும் வேண்டும்.

பகவானைப் பற்றி எப்போதும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டுமானால் அவனது லீலைகளைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இராமாயணம், மஹாபாரதம் போன்றவை இறைவனின் லீலைகளை விளக்கமாகக் கூறுகின்றன. சில பேருக்குப் பாகவதம் போன்ற புத்தகங்களைப் படித்தாலும் பக்தியோ நம்பிக்கையோ ஏற்படுவதில்லை. காரணம் என்ன வென்றால் அவர்கள் இறைவனின் லீலையைப் பற்றிப் படித்த வுடன், ''இறைவனும் நம்மைப் போலவேதான் இருக் கின்றான். அதில் என்ன சிறப்பு?'' என்று நினைத்துக் கொள் வார்கள். ஆனால் நிலைமை அவ்வாறில்லை.

பகவானுக்கு எவ்வளவு சக்தியிருந்தாலும் அவன் மனிதர் களைப் போல் காட்சியளிக்கின்றான். பகவான் கிருஷ்ண பரமாத்மா கோபியருடன் விளையாடினான், அதே கிருஷ்ண பரமாத்மா கீதையையும் உபதேசம் செய்தான். இவையெல் லாம் நம் நன்மைக்காகவே ஆகும். பகவான், முருகனைப் போல் காட்சியளிக்கிறான் என்பதற்காக அவன் முருகன் மட்டும்தான் என்று நினைப்பது தவறு. ஒரு சாமான்யமான இந்திரஜால வித்தைக்காரன் கூடக் கையில் திடீரென்று ஏதேதோ பொருள்களை வரவழைத்துக் காண்பிப்பான். அவன், தன் கையை மூடித் திறந்தவுடன் வேறு பொருள்களை நாம் பார்ப்போம். இப்படிப்பட்டவனுக்கே இவ்விதமான சக்திகள் இருக்கும்போது இறைவனுடைய சக்திகளைப் பற்றி

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நாம் என்ன கூறுவது? இறைவனுடைய மாயாசக்தி மிகவும் உயர்ந்ததாயிருக்கிறது. அதை வைத்துக்கொண்டு இறைவனுல் பலவிதங்களில் காட்சியளிக்க முடியும். அவனுக்கு ஒரு உபாதி(எல்லை) இருக்கிறதென்று நாம் கூறமுடியாது, இதைப் புரிந்து கொள்ளாமல் இறைவன் நம்மைப் போல் ஒரு சாதாரண மனிதனுகவே வாழ்ந்தான் என்று நினைத்தால் அது நமது துரதிருஷ்டமேயாகும்.

நாம் நம்முடைய கடமைகளை சரிவர மேற்கொள்ள இறைவன் ஒரு முறை அல்ல-பலமுறை அவதரித்திருக்கிறுன். ஆதிசங்கரரும் இறைவனுகிய பரமசிவனின் அவதாரம்தான். அவர் நமக்கு பேருதவி புரிந்திருக்கிறுர். அவர் அவதரித்த சமயம், மக்கள் வைதீக தர்மத்தில் சிரத்தையை விட்டுவிட்டு மற்ற தர்மங்களைப் பின்பற்ற ஆரம்பித்திருந்தார்கள். கர்மாக்கள் விஷயத்தில் சிரத்தை இல்லாமலிருந்தார்கள். சங்கரரின் காலத்தில் குமாரிலபட்டர், மக்கள் கர்மாவிற்கு முக்கியத்துவம் கொடுத்து அதைச் சரிவர மேற்கொள்ள வேண்டும் என்று உபதேசம் கொடுத்து மக்களிடம் நம்பிக்கையை வளர்த்தார். அதனுல் மக்கள் கர்மாவிலும், வேதத்திலும் மட்டும் நம்பிக்கை வைத்து கர்மாக்களை மேற் கொண்டு வந்தார்கள். ஆனுல் ''கர்மாவை மட்டும் செய்து கொண்டிருந்தால் (வேதாந்த) விசாரமே செய்ய முடியாமல் வாழ்க்கை கழிந்துவிடும். விசாரமில்லாவிட்டால் அது ஜடத் தன்மை போலாகிவிடும்'' என்று கருதிய சங்கரர் மக்களை நோக்கி, ''நீங்கள் கர்மாக்களை அவசியம் செய்துகொண்டு வாருங்கள். ஆனுல் அவற்றை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யுங்கள். அதனுல் உங்களுக்கு மனத்தூய்மை ஏற்படும். அதன் மூலம் வேதாந்த விசாரம் செய்யலாம்'' என்று உபதேசித்தார்.

நாம் யார்? நம்முடைய ஸ்வரூபம் எது? என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்வதுதான் வேதாந்த விசாரம் எனப் படும். விசாரம்செய்வதற்கு ஒரு அடிப்படை என்பது வேண்டும். அந்த ஆதாரம்தான் நம் வேதாந்தமாகும்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அதுவே நம் மகான்கள் காட்டும் வழியாகும். அதன்படி நாம் நடந்துகொள்ள வேண்டும். இந்தப் பூமியில் மகான்கள் அவதாரம் பெற்று நமக்கு நல்வழியைக் காட்டியுள்ளார்கள். நாம் அவர்கள் காட்டிய நல்வழியைப் பின்பற்றி நம் கடமைகளைச் செய்துவர வேண்டும். அதன் மூலம் நன்மையை அடைய வேண்டும்.

ஹர நம: பார்வதீபதயே!
ஹர ஹர மஹாதேவ!!
ஜானகீகாந்தஸ்மரணம்!
ஜய ஜய ராம ராம!!

———

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி சங்கராச்சார்ய மஹாஸ்வாமிகளின் அருளுரைகள்

தொகுப்பு ஒவ்வொரு தொகுப்பின் விலை ரூ. 1-50

10. எது தர்மம் ?
11. கலியுகத்தில் நற்கதிக்கு வழி
12. உலக வாழ்க்கை வாழ்பவர்கள் ஆன்மீகத்தில் எவ்வாறு ஈடுபடுவது ?
13. நான்கு தகுதிகள்
14. பக்தனது உடல் பெறுகின்ற புனிதம்
15. மதமாற்றம் எவ்வாறு ஏற்படுகிறது ?
16. மனத்தூய்மைக்கான உணவு
17. இறைவன இருக்கின்றனு ?
18. மனிதப் பிறவியும் மற்ற அரிய தகுதிகளும்
19. புலன்களில பற்றுதல் அழிவையே தரும்
20. பக்தனின் ஒரு பிரார்த்தனை
21. குரு என்பவர் யார் ?
22. பரம பொருளைப் பற்றிய விசாரணை
23. தானத்தின் மேன்மை
24. உருவ வழிபாடு தவருனதா ?
25. அனைத்துலகின் குருவான ஆதிசங்கரர்
26. ஸத்குருவின் இலட்சணங்கள்
27. வேதம நமக்குத் தேவை
28. ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள பொறுப்புகள்
29. சிவனும் விஷ்ணுவும் ஒருவரே
30. இராமாயணத்தைப் படியுங்கள்
31. சீடனுக்கு வேண்டிய தகுதிகள்
32. பூஜையை முறைப்படிச் செய்யவேண்டும்
33. அறியாமல செய்யும் பாவங்களுக்கான பிராயச்சித்தம்
34. அனைவருக்கும் எளிதான ஒரு மந்திரம்
35. இறைவனது அருள்நிழல்
36. கீதை புகட்டும் நெறி
37. ஆலயங்களைப் பராமரித்தல் அவசியம்
38. ஸ்ரீ ருத்ரத்தின் மஹிமை
39. நாளை நம் கையில் இல்லை
40. முறையான வாழ்வில் குறையேதுமில்லை
41. வாழ்க்கையின் குறிக்கோள்
42. அனைத்து வரங்களையும் அம்பிகை அளிக்கிறாள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri